செ. வெ. எண் 778 நாள் 5-11-09

# செய்தி வெளியீடு–5.11.2009

## தமிழ்நாடு அரசுக்கு சிப்காட் நிறுவனம் 2008–2009ம் ஆண்டின் ஆதாயப் பங்குத் தொகை 14 கோடியே 48 இலட்சம் ரூபாய்!

## முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

தமிழகத்தில் தொழில் வளாகங்கள் / தொழிற் பூங்காக்கள் / தொழில் மையங்களை உருவாக்குவதில் முக்கிய பங்காற்றி வரும் சிப்காட் நிறுவனம் 2006 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து இலாபம் ஈட்டி தமிழக அரசுக்கு ஆதாயப் பங்குத் தொகையை வழங்கி வருகிறது.

2006–07 ஆம் ஆண்டில் சிப்காட் நிறுவனம் 329 கோடியே 90 இலட்சம் ரூபாய் வருமானமும், 56 கோடியே 69 இலட்சம் ரூபாய் நிகர இலாபமும் ஈட்டி, 20 சதவீத ஆதாயப் பங்குத் தொகையாக 11 கோடியே 58 இலட்சம் ரூபாயைத் தமிழக அரசுக்கு வழங்கியது.

அதேபோல சிப்காட் நிறுவனத்தின் மிகவும் உயர்ந்த வருமானமாக 2007–2008 ஆம் ஆண்டில் 364 கோடியே 93 இலட்சம் ரூபாய் மற்றும் நிகர இலாபமாக 96 கோடியே 66 இலட்சம் ரூபாய் ஈட்டி, 25 சதவீதம் ஆதாயப் பங்கு தொகையாக 14 கோடியே 48 இலட்சம் ரூபாயைத் தமிழக அரசுக்கு வழங்கியது.

இவற்றைத் தொடர்ந்து உலகளாவிய பொருளாதாரத் தேக்கநிலை இருந்த போதிலும் 2008–2009ஆம் ஆண்டில் தமிழக அரசின் நல்லிணக்கத் தொழில் கொள்கைகள் காரணமாக சிப்காட் நிறுவனம் 351 கோடியே 86 இலட்சம் ரூபாய் மொத்த வருமானமும், 90 கோடியே 38 இலட்சம் ரூபாய் நிகர இலாபமும் ஈட்டி சாதனை படைத்துள்ளது. இதன் பயனாகத் தமிழக அரசுக்கு 25 சதவீத ஆதாயப் பங்குத் தொகையான 14 கோடியே 48 இலட்சம் ரூபாயை முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் சிப்காட் நிறுவனம் சார்பில் துணை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (5.11.2009) வழங்கினார்.

இந்நிகழ்வின்போது, தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு. கே.எஸ்.ஸ்ரீபதி, இ.ஆ.ப., நிதித் துறை முதன்மைச் செயலாளர் திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., தொழில் துறை முதன்மைச் செயலாளர் திரு. எம்.எப் பாரூகி, இ.ஆ.ப., சிப்காட் நிறுவனத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் டாக்டர் என். கோவிந்தன், இ.ஆ.ப. மற்றும் உயர் அதிகாரிகள் உடனிருந்தனர்.

*****

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9